**ஐ.டி.எண்.44/2025** **19.01.2026**

**தொ.த.சாட்சி 1 திருமதி. சங்கீதாடேனியல் குறுக்கு விசாரணை**

நான் முதன்முதலில் 08.04.2003 அன்று வித்யாலய பள்ளியில் ஸ்டெனோவாக பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். அதன்பின்பு நான் ஐடாஸ்கடர் பள்ளி அசோசியேசனில் சீனியர் ஸ்டெனோவா பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். அதற்காக எனக்கு அளிக்கப்பட்ட பணிநியமன உத்தரவு தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது **நி.த.சா.ஆ1**. 01.06.2020 அன்று என்னுடைய பணி நிரந்தரம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்காக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது **நி.த.சா.ஆ2**. எனது இரண்டு மகள்களும் இந்த பள்ளியில் தான் படிக்கிறார்கள் என்றால் சரிதான். எங்களுக்கு பணியாளர் விதிகள் உள்ளன என்றால் சரிதான். அந்த விதிமுறைகள் **நி.த.சா.ஆ.3**. எனக்கு இரண்டு அலுவலக மின்னஞ்சல்கள் உள்ளன என்றால் சரிதான். அவை office.ckc@scudderschool.ac.in & sangeetha.daniel@scudderschool.ac.in. பள்ளியை நிர்வாகம் செய்வதற்கு மேனேஜ்மெண்ட் கமிட்டி உள்ளது என்றால் சரிதான். கரஸ்பான்டன்ட், பிரின்சிபல், தலைமை ஆசிரியை, மேனேஜர், டிரஸ்சரர் போன்ற அதிகாரிகள் உள்ளனர் என்றால் சரிதான். மேனேஜ்மெண்ட் கமிட்டியில் உள்ள உறுப்பினர்களும் மற்றும் கரஸ்பாண்ட்டும் சி.எம்.சி. மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள் என்றால் சரிதான். இந்த பொறுப்பில் உள்ளவர்கள் அனைவரும் குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு மாறி வருவார்கள் என்றால் சரிதான். நான் பணியில் இருக்கும் பொழுது கரஸ்பான்டன்டாக டாக்டர் ராஜீவ்கார்த்திக் என்பவர் இருந்தார் என்றால் சரிதான். டாக்டர் தீபக்வினோத்பிரான்சிஸ் என்பவர் மேனேஜ்மெண்ட் கமிட்டி மெம்பராக இருந்தார் என்றால் சரிதான். ஆன்அருள்தாஸ் என்பவர் தலைமை ஆசிரியராக இருந்தார் என்றால் சரிதான். செந்தில் குமரன் என்பவர் அலுவலக மேலாளராக இருந்தார் என்றால் சரிதான். இவர்களுடன் நீரஜா என்பவர் கணக்காளராக பணியில் இருந்தார் என்றால் சரிதான். பிரின்சிபல்லாக திருமதி. ஸ்வர்ணாஜோஸ்வா என்பவர் இருந்தார் என்றால் சரிதான். ஆன்அருள்தாஸ் என்பவர் ஆரம்பத்தில் ஆசிரியராக இருந்தார் என்றால் சரிதான். நான் அவர்களைவிட அதிக வருடம் பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான்.

01.07.2024 அன்று சௌமியா மற்றும் ரேவதி என்ற இரு நபர்கள் பணியில் சேர்ந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 09.07.2024 அன்று ஆன்அருள்தாஸ் தலைமை ஆசிரியர் சௌமியா மற்றும் ரேவதி இருவரையும் எங்கள் அனைவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார் என்றால் சரியல்ல. அன்று என்னுடைய பணியிடத்தை லைப்ரரி ஆலுக்கு அருகே மாற்றும்படி தலைமை ஆசிரியர் உத்தரவிட்டார் என்றால் சரியல்ல. அன்றைய தினம் காலை 10 மணிவரை பணியில் இருந்தேன். என் தந்தைக்கு உடல்நிலை சரியில்லை என்று நான் விடுப்பு எடுத்தேன் என்றால் சரிதான். அன்றைய இரவு நான் இமெயில் மூலம் விடுப்பு கடிதத்தை அனுப்பினேன் என்றால் சரிதான் அது தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அது **நி.த.சா.ஆ.4**. நான் அனுப்பிய இமெயிலில் எனது தந்தையின் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது என்று எழுதியுள்ளேன் என்றால் சரிதான். 13.07.2024 அன்று மீண்டும் நான் பணிக்கு வந்துவிடுவதாக இமெயிலில் கூறியிருந்தேன் என்றால் சரிதான். இந்த இமெயிலில் என்னை வேலைக்கு வரவேண்டாம் என்று நிறுத்தி விட்டார்கள் என்று நான் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். என் அப்பா 09.07.2024 முதல் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்பதைக்காட்டுவதற்கு நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் டிஸ்ச்சார்ஜ்சம்மரி தாக்கல் செய்தேன். நான் விடுப்பு கோரி இமெயில் அனுப்பிய மறுநாள் 10.07.2024 அன்று தலைமை ஆசிரியர் என் தந்தையின் உடல்நிலை குறித்து வருத்தம் தெரிவித்து எனக்கு இமெயில் அனுப்பி இருந்தார் என்றால் நான் அவர் அனுப்பிய இமெயிலை படித்து பார்க்கவில்லை. இந்நாள் வரை நான் இமெயிலை திறந்து படித்து பார்க்கவில்லை. இந்நாள் வரை நான் எந்த இமெயிலையும் திறந்து படித்து பார்க்கவில்லை. 09.07.2024 அன்று நான் டாக்டர் தீபக்வினோத்பிரான்சிஸ் என்பவரிடம் எதுவும் பேசவில்லை. 23.07.2024 அன்று எனக்கு நிர்வாகம் அனுப்பிய கடிதம் தொ.த.சா.ஆ2 என்றால் சரிதான். அந்த கடிதத்தில் என்னை வேலைவிட்டு நிறுத்தியதாக எதுவும் கூறப்படவில்லை என்றால் சரிதான். 27.07.2024 அன்று நான் நிர்வாகத்திற்கு அனுப்பிய பதில் கடிதம் தொ.த.சா.ஆ3 என்றால் சரிதான். இந்த கடிதத்தில் நான் தொழிலாளர் நல அலுவலரிடம் மனு சமர்ப்பித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வேலைக்கு திரும்பி வருவதாக அந்த கடிதத்தில் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். 16.07.2024

அன்று தொழிலாளர் நல அலுவலரிடம் நான் மனு சமர்ப்பித்தேன் என்றால் சரிதான். 13.07.2024 அன்று என்னை வேலைவிட்டு நிறுத்தியதாக கோரி 3 நாட்களில் தொழிலாளர் நல அலுவலரிடம் மனு அளித்தேன் என்றால் சரிதான். தொழிலாளர் அலுவலரிடம் நிர்வாக தரப்பினர் தாக்கல் செய்த பதிலுரை தொ.த.சா.ஆ4 என்றால் சரிதான். அந்த பதிலுரையில் நிர்வாகம் என்னை வேலைவிட்டு அனுப்பவில்லை என்று கூறியுள்ளது என்றால் சரிதான். பேச்சுவார்த்தையின் பொழுது என் பணியிடத்தை மாற்றக்கூடாது என்பது தான் எனது கோரிக்கையாக இருந்தது என்றால் சரியல்ல. தொழிலாளர் உதவி ஆணையர் 03.04.2025 அன்று அளித்த சமரச முறிவு அறிக்கை பற்றி எனக்கு தெரியாது. 12.06.2025 அன்று தொ.த.சா.ஆ6 நிர்வாகம் என்னை மீண்டும் பணிக்கு வரும்படி கடிதம் அனுப்பியது என்றால் சரிதான். 17.06.2025 அன்று நான் அளித்த பதில் கடிதம் தொ.த.சா.ஆ7 என்றால் சரிதான். அதில் கீழ்நிலைப்பணி அளித்தால் நான் பணிபுரியமாட்டேன் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். கீழ்நிலைப்பணி என்பது என்ன என்று நான் எங்கேயும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தொழிலாளர் உதவி ஆணையர் சமரச முறிவு அறிக்கை அளித்த 3 மாதங்களுக்கு பிறகு தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தொ.த.சா.ஆ7-ல் நான் மறுபடியும் வேலைக்கேட்டதாகவோ அல்லது நான் வேலைக்கு போன போது எனக்கு வேலை மறுக்கப்பட்டதாகவோ எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். நான் பணியில் இருக்கும் பொழுது எனக்கும் தலைமை ஆசிரியராக இருந்த ஆன்அருள்தாஸ் என்பவருக்கும் இடையே சுமுகமான உறவு இருந்ததா என்றால் இல்லை. தலைமை ஆசிரியரான ஆன்அருள்தாஸை பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்பது தான் என்னுடைய நோக்கமாக இருந்தது என்றால் சரியல்ல. அவருடைய வயது 59. அவர் தற்பொழுது தலைமை ஆசிரியராக பணியில் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பள்ளியில் முறையாக நடக்காத விசயங்களை குறித்து நான் ஆட்சேபணை எழுப்புவேன் என்று வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னை ஒரு அறையில் இருந்து மற்றொரு அறைக்கு பணியிட மாற்றம் செய்ததற்காக தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கீழ்நிலைப்பணி என்று ஒன்றும் இல்லை வழக்கிற்காக கற்பனையாக நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 10.07.2024 மற்றும் 13.07.2024 ஆகிய தேதிகளில் என்னை மீண்டும் பணிக்கு வரும்படி

தான் இமெயில் அனுப்பி இருந்தார்கள் என்றும் வழக்கிற்காக நான் இமெயிலை படிக்கவில்லை என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனு மற்றும் நிருபண வாக்குமூலத்தில் 13.07.2024க்கு பின்னிட்டு நான் இமெயில் பார்ப்பதை மறுக்கப்பட்டதாக நான் எங்கும் கூறவில்லை என்றால் சரிதான். நிர்வாகம் அனுப்பிய இமெயில் அனைத்தும் என்னுடைய இமெயில் முகவரியான sangeetha.daniel@scudderschool.ac.in-க்கு அனுப்பப்பட்டது என்றும் இமெயில் படிக்கவில்லை என்று வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. நிர்வாகம் தாக்கல் செய்த பதிலுரையிலும் என்னை வேலைவிட்டு நீக்கவில்லை என்று நிர்வாகம் கூறியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆன்அருள்தாஸ் என்பவருக்கு பணிநியமனம் செய்வதற்கும் பணியை விட்டு நீக்குவதற்கும் அதிகாரம் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னுடைய சீனியர் ஸ்டெனோ என்ற பணிநிலையை எந்தவிதத்திலும் அவர் மாற்றவில்லை என்றும், பணியிடத்தைதான் மாற்றினார் என்றால் சரியல்ல. தூண்டுதலின் பேரில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எனக்கு வேலைக்கு செல்லவேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் நிர்வாகம் பதில் தாக்கல் செய்த உடனே வேலைக்கு செல்லும் விருப்பத்தை நீதிமன்றத்தில் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல. வேலை மறுக்கப்பட்டதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.01.19 15:20:12 +0530

Presiding Officer,
Principal Labour Court, Vellore.